அரசாங்க நிருவாகச் சுற்று நிருப இல. 43/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1989 ஆகஸ்ட் 21 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

**அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கடமைக்கு வரமுடியாதிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட லீவு வழங்குதல்.**

கேகாலை, கம்பஹா, கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கடமைக்குச் சமுகமளிக்க முடியாதிருந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

02. அரசாங்க உத்தியோகத்தர்கள் தமக்கு விசேட லீவு வழங்குமாறு விண்ணப்பிக்குமிடத்து, அப்பிரதேசத்துக் கிராம சேவை உத்தியோகத்தரும் பிராந்திய போக்குவரத்துச் சபைச் சாலைக் கண்காணிப்பாளரும் உத்தியோகத்தரது வதிவிடத்துக்கும் வேலையிடத்துக்கும் இடையிலிருக்கும் பாதை வெள்ளத்தால் தடுக்கப்பட்டு பிரயாணஞ் செய்ய முடியாத நிலையில் இருந்ததாக சான்று அளித்தால் மட்டுமே அவ்விண்ணப்பம் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

03. சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை என நிறுவனத் தலைவர் சொந்த முறையில் திருப்தியுற்றால், அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு அவர் விசேட லீவு வழங்கலாம்.

04. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குத் தொடர்பில் மட்டுமே இச்சலுகை ஏற்புடையது என்பதைக் கருத்திற் கொள்க.

ஒப்பம்: (எம். என். ஜுனைட்)
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அரசாங்க
நிருவாக இராஜாங்கச் செயலாளர், மேலதிகச்
செயலாளர்.